# இலங்கை பத்திரிகைப் பேரவை

## ஆண்டு அறிக்கையும் கணக்குகள் அறிக்கையும்

*2012 ஜனவரி 01 - 2012 டிசம்பர் 31*

155/15, காசல் வீதி,
கொழும்பு 08,
2013.02.28.

கௌரவ மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சர்,
மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு,
163, கிருலபன மாவத்தை,
பொல்ஹேன்கொட,
கொழும்பு 05.

கௌரவ அமைச்சர் அவர்களே,

**ஆண்டறிக்கை - 2012**

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவை சட்டத்தின் 14 ஆம் பிரிவினது நியதிக்கு இணங்க இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் கீழ் குறிப்பிடப்பட்ட அறிக்கையை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

1. 2012 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய பேரவையின் மீதான அறிக்கையும் பேரவையின் கொள்கை நிகழ்ச்சித்திட்டமும் ;

2. இக்காலப் பகுதிக்குரிய கணக்குகள் கூற்றின் பிரதி ஒன்று ;

3. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

தங்கள் உண்மையுள்ள,
(சனாதிபதி சட்டத்தரணி) டபிள்யூ. தயாரத்ன,
தலைவர்.

# இலங்கை பத்திரிகைப் பேரவையின் 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை

**இலங்கை பத்திரிகைப் பேரவை**

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தினால் அமைக்கப்பட்ட இலங்கை பத்திரிகைப் பேரவை, மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சின் கீழ் இயங்கும் நியதிச் சபையாகும்.

இலங்கை பத்திரிகைப் பேரவையை அமைத்ததன் நோக்கம்:-

(1) இலங்கை பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாத்தல்;

(2) அச் சுதந்திரத்தை தவறாக பயன்படுத்துவதை தவிர்த்தல்;

(3) உண்மையான தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கான உரிமையை பயன்படுத்துதல்.

01.01.2012 ஆந் திகதி தொடக்கம், இல. 155/15, காசல் வீதி, பொரளை, கொழும்பு 08 என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

## 1. பேரவையின் அமைப்பு

நீதிமன்றத்தின் பகுதியாக அலுவல்களை மேற்கொள்ளும் இலங்கை பத்திரிகை பேரவையானது ஏழு (07) உறுப்பினர்களை கொண்டதாகும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் உறுப்பினர்கள் ஆறுபேர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்க தகவல் பணிப்பாளர் உத்தியோகப்பூர்வமாக (தற்போதைய தகவல் பணிப்பாளர்) நியமிக்கப்படுவார். ஒருவர் புதினப் பத்திரிகைத்துறையின் பிரதிநிதியாகவும் இருத்தல், மற்றும் ஒருவர் தொழிலிலீடுபட்டுள்ள பத்திரிகை எழுத்தாளரின் பிரதிநிதியாக இருத்தல் வேண்டும். உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ காலம் 03 ஆண்டுகளாகும்.

**இலங்கை பத்திரிகைப் பேரவையின் 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை**

மேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர்கள் கீழே குறிப்பிடப்படுள்ளது:-

| பதவி | பெயர் | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| தலைவர் | சனாதிபதி சட்டதரணி<br>டபிள்யு தயாரத்ன அவர்கள் | 2012.06.14 |
| உறுப்பினர் | பேராசிரியர் ஆரியரத்ன அதுகல அவர்கள் | 2010.06.04 |
| உறுப்பினர் | பேராசிரியர் சுனந்த மகேந்திர அவர்கள் | 2012.06.14 |
| உறுப்பினர் | சட்டத்தரணி சந்தன பிரசாத் சூரிய ஆராச்சி அவர்கள் | 2012.06.14 |
| உறுப்பினர் | திரு. ஆரியநந்த தொபகாவத்த | 2012.06.14 |
| உறுப்பினர் | திரு. பிரதீப் விஜேசுந்தர | 2011.09.05 |
| உறுப்பினர் | திரு. கருணாதாச சூரியஆரச்சி | 2012.06.14 |

மேலும் மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரினால் 2012.04.02 ஆந் திகதி தொடக்கம் திறைசேரியின் பிரதிநிதியாக திருமதி. எம். கே. டீ. என். மாதம்பே அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## 2. பேரவையின் கூட்டங்கள்

தலைவர் மற்றும் உறுப்பினர்களின் தலைமைத்துவத்தில் 22 கூட்டங்கள் 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

## 3. முறைப்பாடுகள்

மீளாய்வின் கீழாண்டில் பத்திரிகைகளுக்கு எதிராக 42 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

2011 ஆம் ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 10 ஆகும்.

| | |
|---|---|
| முன்னைய ஆண்டில் கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகள் | - 10 |
| 2012 ஆம் ஆண்டின் முறைப்பாடுகள் | - 42 |
| 2012 ஆம் ஆண்டில் விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | - 52 |

முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற மூலகங்கள் பின்வருமாறு:-

1. தனிநபர்கள்
2. நிறுவன தலைவர்கள்
3. கலாநிதி
4. விசேட வைத்தியர்கள், வைத்தியர்கள்
5. குருமார்கள்
6. ஆசிரியர்கள், ஆசிரியைகள்
7. தொழிற் சங்கங்கள்

மீளாய்வின் கீழாண்டில் முறைப்பாடுகள் தொடர்பில் பேரவையின் தீர்மானம் கீழே தரப்பட்டுள்ளது:-

| | | |
|---|---|---|
| ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவை | - | 21 |
| பரஸ்பரம் இணங்கப்பட்டவை | - | 01 |
| மேலும் நடவடிக்கை அவசியமற்றவை | - | 19 |
| தள்ளுபடி செய்யப்பட்டவை | - | 05 |
| கட்டளையிடப்பட்டவை | | 06 |
| | | 52 |

“மேலும் நடவடிக்கை அவசியமற்றவை” என வர்க்கப்படுத்தப்பட்டவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

* முறைப்பாடானது பத்திரிகை பேரவையின் சட்டத்திற்கு அமைவானதல்ல.
* முறைப்பாட்டாளர்கள் தகுந்த நேரத்திற்கு அவசியமான பத்திரங்களை ஒப்படைக்காதமை.
* முறைப்பாடு விசாரணையின் போது முறைப்பாட்டாளர்கள் சமுகமளிக்காமை.
* முறைப்பாடு தொடர்பிலான பத்திரிகை அப்போது பிரசுரிக்கப்படாமை.
* பத்திரிகை கட்டுரையினால் முறைப்பாட்டாளருக்கு தீங்கு ஏற்படாமை.

### 4. ஆளணியினர்

தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து புதிய படிவத்திற்கு ஏற்ப ஆட்சேர்ப்பு அமைப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது.

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் அலுவலக உதவியாளராக (ஆராச்சி) பதவி வகித்த திரு. எல். எம். ஜீ. நந்தசிறி 2012.11.19 அன்றும் தூதுவராக பதவி வகித்த திரு. ஆர். கே. சிறிபால 2012.03.20 அன்றும் 60 வயதை பூர்த்தி செய்து ஓய்வு பெற்றார்கள். தற்போதைய சேவையாளரின் எண்ணிக்கை 10 ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.ஏ. ஜகத்சிறி | - | கணக்காளர் |
| 2. | திருமதி. எச். எஸ். விஜேரத்ன | - | செய்தி ஆய்வாளர் |
| 3. | திருமதி. இந்திராணி முருகேசு | - | மொழிபெயர்ப்பாளர் |
| 4. | திருமதி. டீ.ஏ. அனோமா திலகரத்ன | - | கனணி இயக்குநர் |
| 5. | திருமதி டீ.என். நில்மினி பீரிஸ் | - | கணக்கு உதவியாளர் |
| 6. | திருமதி கே.ஜீ.என்.எச். பதிரத்ன | - | முகாமைத்துவ உதவியாளர்(எழுதுவினைஞர்) |
| 7. | திரு. கே.எல். சந்திரபால | - | சாரதி |
| 8. | திரு ஜீ.பீ. கருணாதிலக்க | - | சாரதி |
| 9. | திரு.கே.ஜீ.எப். விஜேரத்ன | - | அலுவலக அலுவல்கள் உதவியாளர் |
| 10. | திரு.எச்.ஏ.டீ. விஜேரத்ன | - | அலுவலக அலுவல்கள் உதவியாளர் |

மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சின் மேலதிக செயலாளரான திரு. ஜே. டீ. சீ. ஜயசிங்க 2011.12.23 ஆந் திகதி தொடக்கம் 2012.09.05 ஆம் திகதி வரை பதில் பத்திரிகை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதன் பின்னர் மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சின் பணிப்பாளரான (திட்டமிடல்) திரு. கே. எம். ஜீ. எஸ். நாலக கலுவெவ அவர்கள் 2012.09.18 ஆந் திகதி தொடக்கம் பதில் பத்திரிகை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சின் திட்ட அமுலாக்கல் உதவியாளராக பதவி வகித்த திரு. டீ. நிரோஷன அவர்கள் 2009.09.01 ஆந் திகதி தொடக்கம் 2011.08.31 வரையில் இரண்டாம் நிலை அடிப்படையில் இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் உதவி பத்திரிகை ஆணையாளராக 3 வருடங்களுக்கு நியமிக்கப்பட்டு தற்போது ஆறு மாதங்களுக்கு சேவை நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

### 5. அமைச்சினால் இலங்கைப் பத்திரிகைப் பேரவைக்கு வழங்கப்பட்ட பணிப்புக்கள்

மீளாய்வின் கீழான ஆண்டில் மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சினால் எந்தவித பணிப்புக்களும் வழங்கப்படவில்லை.

### 6. ஊடகவியலாளர்களை அறிவூட்டும் வேலைத்திட்டங்கள்

(1) கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாகாண தொடர்பாடல் பயிற்சி பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் 2012 ஆண்டில் நடாத்தப்பட்டன.

| திகதி | பட்டறை | பங்குபற்றிய ஊடகவியலாளர்கள் பாடசாலை மாணவர்கள் | இடம் |
|---|---|---|---|
| 2012.05.18 | குளியாபிட்டிய பாடசாலை ஊடகவியலாளர்களின் பட்டறை | 200 | குளி/சாராநாத் வித்தியாலயம் குளியாப்பிட்டிய |
| 2012.06.26 | தொழில்சார் ஊடகவியலாளர்களின் பட்டறை | 126 | அரச தகவல் திணைக்களம், பொல்ஹேன்கொட, கொழும்பு - 05 |
| 2012.06.30 | திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் பட்டறை | 65 | திருகோணமலை மாவட்ட செயலாளர் அலுவலகம், திருகோணமலை. |

| திகதி | பட்டறை | பங்குபற்றிய ஊடகவியலாளர்கள் பாடசாலை மாணவர்கள் | இடம் |
|---|---|---|---|
| 2012.08.25 | கண்டி மாவட்ட மாகாண ஊடகவியலாளர்களின் பட்டறை | 110 | "Oak Ray" Hotel, Kandy. |
| 2012.10.08 | பாடசாலை ஊடக பட்டறை - கண்டி மாவட்டம் | 200 | வலய மத்திய மகா வித்தியாலயம், |
| 2012.10.09 | கண்டி மாவட்ட பாடசாலை ஊடக பட்டறை | 200 | நுகவெல மகா வித்தியாலயம், கண்டி |
| 2012.11.24 | களுத்துறை மாவட்ட ஊடக கருத்தரங்கு | 74 | Garden Beach Hotel, Kalutara. |
| 2012.12.15 | அம்பாறை மாவட்ட ஊடக கருத்தரங்கு | 81 | Monty Hotel, Ampara. |

**"தேசத்திற்கு மகுடம்" வேலைத்திட்டம்**

2012 தேசத்திற்கு மகுடம் வேலைத்திட்டம் தொடர்பில் இலங்கை பத்திரிகைப் பேரவையினால் அநுராதபுரம் "ஓயாமடுவையில் கண்காட்சி கூடம்" நடாத்தப்பட்டது.

**பத்திரிகை துறை மற்றும் தொடர்பாடல் கல்வி தொடர்பிலான டிப்ளோமா பாடநெறி**

ஊடகவியலாளர்கள் 25 பேரின் பங்களிப்புடன் அவர்களின் விடயம் தொடர்பிலான அறிவை மேம்படுத்தும் முகமாக 2012.10.13 அன்று பத்திரிகை துறை மற்றும் தொடர்பாடல் கல்வி என்னும் டிப்ளோமா பாடநெறியின் III ஆவது தொகுதி ஆரம்பிக்கப்பட்டது.

**வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் தொடர்பாடல் கலந்துரையாடல்**

இக்காலத்திற்கு அவசியமான வெளியீடுகளை இலக்காகக் கொண்டு தொடர்பாடல் நிகழ்ச்சி ஒவ்வொரு வெள்ளிக்கிழமை பிற்பகலில் நடைபெறும்.

(3) 2012 ஆம் ஆண்டில் பேரவையில் பதிவு செய்யப்பட்ட புதினப் பத்திரிகைகளின் எண்ணிக்கை 191 ஆகும்.

7. நிதி

(i) 2012 ஆம் ஆண்டிற்காக இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் மீண்டுவரும் செலவிற்காக 19,600,000/- ரூபாவை மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சினால் வருடாந்த மதிப்பீடு கிடைக்கப்பெற்றது. திறைசேரியிலிருந்து மீண்டுவரும் செலவாக 16,601,000/- ரூபா மாதாந்த தவணையில் ஒதுக்கப்பட்டது. 3,000,000/- ரூபாவை மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சுக்கு மாற்றப்பட்டது.

(ii) 2012 ஆம் ஆண்டின் மூலதன செலவாக 6,82,000 ரூபா திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

(iii) 2012 ஆம் நிதி ஆண்டில் அரசாங்க கொடைகளும் பத்திரிகைப் பதிவுக் கட்டணத்திற்குப் புறம்பாக ஏனைய கொள்ளல்கள் பேரவையின் நிதியில் வைப்பில் இடம்பெற்றவற்றின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூபா சதம் |
|---|---|
| மீளப்பெறும் வைப்புக்களும் ஏனைய அறவீடுகளும் | 3,791,024.05 |
| பிந்திய பதிவுக் கட்டணம் | 102,550.00 |
| | 3,893,574.05 |

(iv) **கொள்ளல் கொடுத்தல் கணக்கு**

இவ்வாண்டில் மொத்த கொள்ளல்களுடன் வருடத்தின் முன் கொண்டு வந்த மீதியான தொகையும் சேர்த்து 21,227,495.39 ரூபா ஆகும். இவ் வருடத்தின் மொத்த செலவீடு 21,052,889.35 ரூபா ஆகும். 2012 ஆம் ஆண்டின் இறுதியில் பேரவையின் கணக்கில் 174,606.04 ரூபா வரவிலிடப்பட்டது.

(v) **பெறுமான செலவுக் கணக்கு**

மீண்டுவரும் செலவாக அரச மானியம் உட்பட வருடத்தின் முழு வருமானம் 17,481,423.11 ரூபா ஆக இருந்ததுடன் 17,561,071.10 ரூபா முழு செலவாக இருந்தது. வருமானத்திலும் மேலதிக செலவு 79,647.99 ரூபா 2012 ஆம் ஆண்டில் வரவிலிடப்பட்டது.

(vi) பேரவையின் திரட்டிய நிதி

2012 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பேரவையின் நிதியில் 1,767,961.23 ரூபா வரவிலிடப்பட்டது. வருட ஆரம்பத்தில் மூலதன தொகை 4,115,000.00 ரூபா ஆகும். வருடத்தின் மூலதன சொத்து 682,000/- ரூபா ஆகும். 2010 ஆண்டில் நிலையான சொத்து (வாகனம்) 777,475.00 ரூபா மீள் பெறுமதியிடப்பட்ட பின்னர் வாகன விற்பனையில் இவ்வருடம் 757,500/- ரூபா மீண்டும் திறைசேரிக்கு அனுப்பிய பின்னர் மூலதன தொகையாக 14,566,975/- ரூபா வரவிலிடப்பட்டது. வருடத்தில் வருமானத்திலும் மேலதிக செலவு 79,647.99 ரூபா உம் முன்னைய ஆண்டில் செம்மையாக்கல் 8,754.33 ரூபா பேரவை நிதிக்கு மாற்றப்பட்டது. வருட இறுதியில் 12,728,120.11 ரூபா வரவிலிடப்பட்டது.

பேரவையின் நிதியில் உபகாரத் தொகையாக 3,334,106/- ரூபா செம்மைபடுத்தப்பட்ட 143,703.35 ரூபா உட்பட நிலையான வருமானம் 10,423,189.19 ரூபா உம், உபகாரத்தொகை ஆய்வு ஆகியன வேறாக 2,381,293.06 ரூபா நிலையான சொத்து 3,401,447.41 ரூபா வரவிலிடப்பட்ட ஏனைய வைப்புக்களாக எடுக்கப்படும்.

(vii) **பத்திரிகை பதிவு செய்தல்**

2012 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையும் பத்திரிகை பதிவுக் கட்டணமாக ரூபா. 85,000 கிடைக்கப்பெற்றது.

**8. நன்றி நவிலல்**

மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சினால் கிடைக்கப்பெற்ற சரியான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்கள் மூலமாக, வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக நடாத்துவதற்கு இலங்கை பத்திரிகைப் பேரவையின் ஊழியர் குழாத்தின் கூட்டு ஒத்துழைப்பையும் பெறமுடிந்ததையிட்டு நான் இன்புறுகிறேன்.

(சனாதிபதி சட்டத்தரணி) டபிள்யு. தயாரத்ன,
தலைவர்.

இலங்கை பத்திரிகைப் பேரவை,
155/15, காசல் வீதி,
பொரளை,
கொழும்பு 08,
2013.02.28.

# இலங்கை பத்திரிகைப் பேரவை

## 2012 திசெம்பர் 31ஆந் திகதியன்று ஐந்தொகை

| 2011 | விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|---|
| ரூபா | அரச மானியம் | | |
| 3,415,000.00 | மூலதன நிதி | 4,115,000.00 | |
| 700,000.00 | திறைசேரியால் வழங்கல் | 682,000.00 | |
| — | திறைசேரிக்கு மீளளிப்பு | (757,500.00) | |
| 777,475.00 | வாகன பெறுமதி ஒதுக்கீடு | 777,475.00 | |
| 9,750,000.00 | நிலையான சொத்தின் மூலதனம் | 9,750,000.00 | 14,566,975.00 |
| (1,767,961.23) | பேரவையின் நிதி (திரட்டியது) | (1,759,206.90) | |
| | | (79,647.99) | (1,838,854.89) |
| 12,874,513.77 | 01.01.2012 அன்று மீதி கூட்டுக. வருமானத்திலும் மேலதிக செலவு | | 12,728,120.11 |
| | வேறுபடுத்தல் | | 3,334,106.00 |
| 3,601,276.13 | உபகாரத் தொகை | | |
| | நடைமுறை பொறுப்பு | | |
| 500.00 | சில்லறை | | |
| | சென்மதியாளர் | 500.00 | |
| 150,544.15 | உள்ளப்படி செலவுகள் | 143,203.55 | 143,703.55 |
| 16,626,834.05 | | | 16,205,929.66 |

| 2011 ரூபா | விபரம் | செலவு | திரட்டிய நிதி | வருமானம் |
|---|---|---|---|---|
| | நிலையான சொத்துக்கள் | | | |
| 10,263,500.00 | வாகனங்கள் | 9,947,680.00 | 1,044,000.00 | 8,903,680.00 |
| 484,620.75 | தளபாடங்களும் இணைப்புகளும் | 1,218,807.75 | 694.388.00 | 524,419.75 |
| 788,065.77 | அலுவலக நலனோம்பு | 1,830,367.58 | 960,426.00 | 869,941.58 |
| 124,177.86 | நூலக நூல்கள் | 177,244.48 | 52,096.62 | 125,147.86 |
| 11,660,364.38 | | 13,174,099.81 | 2,750,910.62 | 10,423,189.19 |
| 93,429.08 | ஆய்வு நிதி | | | 510,822.19 |
| 385,152.45 | கடன் கணக்கு தே.சே.வ. | | | 697,058.06 |
| 927,991.39 | உபகாரத்தொகை | | | 618,412.81 |
| 106,765.68 | நிலுவை வைப்புக்கள் | | | 555,000.00 |
| | நடைமுறை சொத்துக்கள் | | | |
| 408,661.79 | புத்தக இருப்புக்கள் | | 340,658.80 | |
| 46,948.74 | காகிதாதி இருப்புக்கள் | | 113,070.58 | |
| 195,390.17 | கிடைக்கப்பெற்றவருமானம் | | 83,011.17 | |
| 14,000.00 | உற்சவ முற்பண நிலுவை | | 13,000.00 | |
| 1,698,177.50 | இடருதவிக்கடன் நிலுவை | | 1,511,938.50 | |
| 1,030,831.53 | முன் செலுத்துதல் | | 1,165,162.32 | |
| 50,921.34 | வங்கியிருப்பு இல. 078100142268327 | | 174,606.04 | |
| 8,200.00 | கையிருப்பு | | | 3,401,447.41 |
| 16,626,834.05 | | | | 16,205,929.66 |

பத்திரிகை ஆணையாளர்
இலங்கைப் பத்திரிகைப் பேரவை
28 பெப்புருவரி 2013

கணக்காளர்
இலங்கைப் பத்திரிகைப் பேரவை
28 பெப்புருவரி 2013

தலைவர்
இலங்கைப் பத்திரிகைப் பேரவை
28 பெப்புருவரி 2013

## இலங்கை பத்திரிகைப் பேரவை

### 31.12.2012 ஆம் வருடத்திற்கான செலவுத் தொகை

| 2011 (ரூபா சதம்) | விபரம் | (ரூபா சதம்) | 2012 மொத்தம் (ரூபா சதம்) |
|---|---|---|---|
| | செலவின விபரம். ஆளணி ஊதியம் | | 7,627,987.20 |
| 5,258,458.30 | வேதனமும் ஊதியமும் | 5,176,969.43 | |
| 350,305,14 | மேலதிக நேரமும் விடுமுறை கொடுப்பனவும் | 366,897.00 | |
| 621,774,35 | ஊ.சே.நி. இ.ப.பே. | 601,790.17 | |
| 124,354.79 | ஊ.ந.நிதி. இ.ப.பே. | 120,357.98 | |
| 281,000.00 | உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு | 480.000.00 | |
| 426,247.01 | இளைப்பாற்று ஊழியர்களின் கொடுப்பனவு | 520,967.62 | |
| 12,000.00 | கணக்காய்வு குழு கூட்டத்திற்கான கொடுப்பனவு | 64,000.00 | |
| - | ஏனைய கொடுப்பனவு | 297,005.00 | |
| | 2. பிரயாண செலவுகள் | | 104,071.00 |
| 15,086.00 | அலுவலர்கள் | 18,710.00 | |
| 30,012.50 | உறுப்பினர்கள் | 85,361.00 | |
| | 3. விநியோகமும் தேவைப் பொருள்களும் | | 983,395.30 |
| 87,360.56 | எழுது கருவிகள் | 226,547.40 | |
| 612,822.00 | எரிப்பொருளும் மசக்கிடலும் | 427,639.00 | |
| - | எரிபொருள் கொடுப்பனவு | 232,000.00 | |
| 13,564.00 | அலுவலக தேவைகள் | 48,381.00 | |
| - | மருத்துவ தேவைகள் | 900.00 | |
| 22,870.00 | சீருடை (தையற்கூலி உட்பட) | 28,152.90 | |
| 59,935.00 | புதினப் பத்திரிகைகளும் பருவ வெளியீடுகளும் | 19,775.00 | |
| | 4. திருத்தங்களும் பராமரிப்பும் தேய்விறக்கம் | | 2,147,320.85 |
| | அ. திருத்தங்களும் பராமரிப்பும் | | |
| 322,932.54 | வாகனங்கள் | 57,307.66 | |
| 200,958.10 | அலுவலக நலனோம்பு சாதனங்கள் | 53,566.08 | |
| 7,015.00 | அலுவலக கட்டடம் | 29,741.00 | |
| | அலுவலக தளபாடங்கள் | 3,500.00 | |
| 169,075.20 | சுத்திகரிப்பு சேவை | 165,734.40 | |
| | (ஆ). தேய்விறக்கம் | | |
| 150,000.00 | வாகனங்கள் | 904,000.00 | |
| 231,685.33 | அலுவலக நலனோம்பு சாதனங்கள் | 300,664.50 | |
| 158,726.00 | அலுவலக தளபாட இணைப்புக்கள் | 205,026.00 | |
| 350.00 | நூலக நூல்கள் | 630.00 | |
| | (இ) எழுதி நீக்கப்பட்டவை | | |
| - | அலுவலக நலனோம்பு சாதனங்கள் | - | |
| 200.00 | அலுவலக தளபாட இணைப்புக்கள் | - | |
| | (ஈ) பாதுகாப்பு சேவை | | |
| 384,720.00 | 5.போக்குவரத்து,செய்தித் தொடர்பு, பயன்பாடும் ஏனைய சேவைகள் | 427,151.21 | 3,348,089.49 |
| 480,000.00 | போக்குவரத்து | 55,720.00 | |
| - | போக்குவரத்து கொடுப்பனவுகள் | 348,000.00 | |
| 198,794.01 | செய்தித் தொடர்பு, தொலைபேசிச் சேவைகள் | 236,550.85 | |
| 17,730.00 | செய்தித் தொடர்பு, அஞ்சல் சேவை | 26,209.00 | |
| 128,377.46 | பயன்பாடு - மின்சாரம் | 157,790.84 | |
| 1,410,000.00 | அலுவலக கட்டட வாடகை | 1,920,000.00 | |
| 36,017.47 | நீர் வரி | 25,051.30 | |
| 58,234.32 | மதிப்பீடும் வரிகளும் | - | |
| 225,081.28 | வெளியீடுகளும் விளம்பரங்களும் | 37,665.60 | |
| 51,362.21 | அச்சிடலும் கட்டுதலும் | 164,423.00 | |
| 131,463.60 | உபசரிப்பு செலவுகள் | 139,013.94 | |
| - | காரியாலய சமய வைபவங்கள் | 20,305.00 | |
| 22,495.00 | கணக்காய்வு கட்டணங்கள் | 26,880.00 | |
| 11,032.50 | எதிர்பாராத செலவுகள் | 22,625.00 | |
| 22,904.07 | வங்கி கட்டணம் | 12,708.00 | |
| 70,593.46 | கார் காப்புறுதியும் உத்தரவுப் பத்திரமும் | 155,146.96 | |
| 100,000.00 | சட்டத்துறை கட்டணம் | - | |
| | விசாரணை கட்டணம் | 7,000.00 | 7,000.00 |
| | 6. மானியம், உதவிக் கொடுப்பனவுகள் | | 3,343,207.26 |
| 1,132,726.00 | மாகாண தொடர்பாடல் பயிற்சி பட்டறை | 1,686,068.48 | |
| 1,047,186.36 | டிப்ளோமா பாடநெறி | 521,719.00 | |

| 2011 (ரூபா) | விபரம் | (ரூபா சதம்) | மொத்தம் 2012 (ரூபா சதம்) |
|---|---|---|---|
| 853,887.66 | தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சி வெளியீடுகள் | 1,117,919.78 | |
| - | பயிற்சி நெறிகள் - ஆளணி | 3,000.00 | |
| 15,539,337.22 | | 14,500.00 | |
| | | | 17,561,071.10 |
| 61,350.00 | பதிவுக் கட்டணம் | | 86,000.00 |
| 6,650.00 | புத்தக விற்பனை குழு | | - |
| 395.00 | பிரதி பண்ணற் கட்டணம் | | 275.00 |
| 80,507.26 | ஆளணியினர்களின் கடன் மீதான வட்டி | | 68,317.90 |
| 109,200.00 | பிந்திய கட்டணங்கள் | | 102,550.00 |
| 1,210.77 | புத்தக விற்பனை கணக்கு | | 4,082.29 |
| 42,911.55 | வட்டி - சேமிப்பு வங்கி | | 57,797.92 |
| 39,250.00 | வாகன காப்புறுதி உரிமை பெறல் | | - |
| 320,500.00 | டிப்ளோமா பாடநெறி - பெறுகை | | 265,500.00 |
| - | வாகன விற்பனை இலாபம் | | 257,500.00 |
| | மாற்றப்படாத காசோலை | | 38,400.00 |
| 14,877,362.64 | வருமானத்திலும் மேலதிக மொத்த செலவினம் | | 16,680,647.99 |
| 14,000,000.00 | அரச உதவு தொகை | | 16,601,000.00 |
| (877,362.64) | அரச உதவு தொகை வருமானத்திலும் மேலதிக செலவு | | (79,647.99) |

| பதில் பத்திரிகை ஆணையாளர் | கணக்காளர் | தலைவர் |
|---|---|---|
| இலங்கைப் பத்திரிகைப் பேரவை | இலங்கைப் பத்திரிகைப் பேரவை | இலங்கைப் பத்திரிகைப் பேரவை |
| 28 பெப்ரவரி 2013 | 28 பெப்ரவரி 2013 | 28 பெப்ரவரி 2013 |

## இலங்கைப் பத்திரிகைப் பேரவை

### 01.01.2012 தொடக்கம் 31.12.2012 வரையிலான கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| நோக்கக் கோவை | கொள்ளல் | தொகை (ரூபா சதம்) | நோக்கக் கோவை | கொடுப்பனவுகள் | தொகை (ரூபா சதம்) |
|---|---|---|---|---|---|
| 01.01.2012 | தொடக்க நிலுவை | 50,921.34 | 1-1-01-1 | சம்பளமும் கூலியும் | 5,205,531.28 |
| 1-1-01-1 | சம்பளமும் கூலியும் | 47,690.85 | 1-1-01-2 | மேலதிக நேர விடுமுறை படியும் | 326,279.00 |
| 1-1-01-4 | இ.ப. பேரவையின் ஊழியர் சேமலாப நிதி | 0.00 | 1-1-01-4 | ஊ.சே.நி - இ.ப. பேரவையின் | 601,790.17 |
| 1-1-01-6 | உறுப்பினர்களின் கொடுப்பனவு | 0.00 | 1-1-01-5 | ஊ.ந.நி - இ.ப.பே | 120,357.98 |
| 1-1-01-8 | கணக்காய்வாளர் குழு கூட்டத்தின் கட்டணம் | 0.00 | 1-1-01-6 | உறுப்பினர்களுக்கான கட்டணம் | 480,000.00 |
| 1-1-03-01 | காகிதாதிகள் | 0.00 | 1-1-01-7 | உபகாரத் தொகை | 788,137.75 |
| 1-1-04-01(1) | வாகன திருத்தம் | 0.00 | 1-1-01-8 | கணக்காய்வு குழு கூட்ட கட்டணம் | 64,000.00 |
| 1-1-05-3 | பயன்பாடு - மின்சாரம் | 10,841.60 | 1-1-01-9 | ஏனைய கொடுப்பனவு (பயிற்சி, சமயாசமய) | 268,505.00 |
| 1-1-05-4 | அலுவலக கட்டட வாடகை | 0.00 | 1-1-02-01 | பிரயாண செலவு (ஆளணியினர்) | 16,270.00 |
| 1-1-05-9(2) | ஏனைய சேவைகள் உபகாரச் செலவுகள் | 140.00 | 1-1-02-03 | பிரயாண செலவு (உறுப்பினர்கள்) | 84,061.00 |
| 1-1-05-9(7) | ஏனைய சேவைகள் - எதிர்பாராத செலவுகள் | 0.00 | 1-1-03-01 | காகிதாதிகள் | 291,216.24 |
| 1-1-07-1 | மாகாண தொடர்பாடல் செயலமர்வு | 0.00 | 1-1-03-02 | பெற்றோலும் எரிபொருளும் | 427,639.00 |
| 1-1-07-2 | மொழி பயிற்சி நெறி | 0.00 | 1-1-03-02(1) | எரிபொருள் கொடுப்பனவு | 232,000.00 |
| 1-1-09-1(1) | தளபாடங்களும் பொறுத்துக்களும் | 68,677.50 | 1-1-03-03 | மின்சாரப் பொருட்கள் | 0.00 |
| 14 | கொள்வனவு முற்பணம் | 556,830.80 | 1-1-03-04 | காரியாலய தேவைகள் | 48,381.00 |
| 14.1 | பீ. ஓ. வை. ஈ. வரி | 61,357.67 | 1-1-03-05 | மருத்துவ தேவைகள் | 900.00 |
| 15.1 | உற்சவ முற்பணம் | 2,000.00 | 1-1-03-07 | சிற்றூழியர் சீருடை | 28,152.90 |
| 15.2 | இடருதவிக் கடன் | 21,190.00 | 1-1-03-08 | புதினப் பத்திரிகைகளும் வெளியீடுகளும் | 19,775.00 |
| 17 | சிறு ரொக்கம் | 2,787.00 | 1-1-04-01(1) | வாகன திருத்தங்கள் | 46,502.66 |
| 18 | ஊ. சே. நி. | 401.193.29 | 1-1-04-01(2) | காரியாலய நலனோம்பு திருத்தங்கள் | 53.566.08 |
| 20 | மாற்றப்படாத காசோலை கணக்கு | 40,400.00 | 1-1-04-02(1) | காரியாலய கட்டட திருத்தம் | 28,881.00 |
| 21.01 | பெறப்பட்ட கணக்கு | 500.00 | 1-1-04-02(1)-1 | சுத்திகரிப்பு சேவை | 165,534.40 |
| 22 | தொங்கற் கணக்கு | 945,889.98 | 1-1-04-2(2) | அலுவலக உபகரணங்கள் | 3,500.00 |
| 30 | அரச மானியம் - மீண்டும் வரும் | 16,601,000.00 | 1-1-04-5(1) | பாதுகாப்பு சேவை | 427,151.21 |
| 30.01 | அரச மானியம் | 682,000.00 | 1-1-05-1 | போக்குவரத்து | 55,720.00 |
| 31 | பதிவுக் கட்டணம் | 85,000.00 | 1-1-05-1(1) | போக்குவரத்து கொடுப்பனவு | 348,000.00 |
| 31.01 | பிந்திய கட்டணம் | 102,550.00 | 1-1-05-2(1) | செய்தித் தொடர்பு - தொலைபேசி | 216,765.70 |
| 33 | பிரதி பண்ணற் கட்டணம் | 275.00 | 1-1-05-2(2) | செய்தித் தொடர்பு - அஞ்சல் | 26,029.00 |
| 35 | சில்லறை வருமதியாளர் | 0.00 | 1-1-05-3 | பயன்பாடு - மின்சாரம் | 168,632.44 |
| 37 | சம்பள கடன் வட்டி | 54.68 | 1-1-05-4 | அலுவலக கட்டட வாடகை | 960,000.00 |
| 38 | பேரவை நிதி | 82,190.00 | 1-1-05-5 | நீர்வரி | 25,051.30 |
| 41 | புத்தக விற்பனைக் கணக்கு | 1,050.00 | 1-1-05-8(1) | கட்டுதல் - வெளியீடுகள், விளம்பரம் | 37,665.60 |
| 43 | உபகாரத் தொகை | 636,690.00 | 1-1-05-8(2) | அச்சிடுதல் - அஞ்சு கட்டுதல் | 162,423.00 |
| 44 | நானாவித வைப்புக்கள் | 66,765.68 | 1-1-05-9(2) | ஏனைய சேவைகள் - உபகாரச் செலவுகள் | 139,153.94 |
| 47 | மாணவர் பதிவுக் கட்டணம் | 2,000.00 | 1-1-05-9(5) | ஏனைய சேவைகள் அலுவலக மற்றும் சமய வைபவங்கள் | 20,305.00 |

| நோக்கக் கோவை | கொள்ளல் | தொகை (ரூபா) | நோக்கக் கோவை | கொடுத்தல் | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 49 | வாகன நஷ்டஈடு | 0.00 | 1-1-05-9(6) | ஏனைய சேவைகள் - கணக்காய்வு | 26,880.00 |
| 52 | நிலையான வைப்பு 07860-01.0000478-1 | 0.00 | 1-1-05-9(7) | கட்டணம் | |
| 53 | நிலையான வைப்பு 2 006-07-79823 | 0.00 | 1-1-05-9(8) | ஏனைய சேவைகள் - எதிர்பாராத செலவுகள் | 21,925.00 |
| 55 | வாகன விற்பனை கணக்கு | 757,500.00 | 1-1-05-9(9) | ஏனைய சேவைகள் - வங்கிக் கட்டணம் | 10,182.60 |
| | | | 1-1-05-9(10) | ஏனைய சேவைகள் - வாகன காப்புறுதி உத்தரவு பத்திரம் | 90,693.43 |
| | | | 1-1-07-1 | ஏனைய சேவைகள் - சட்டக் கட்டணம் | 0.00 |
| | | | 1-1-07-2 | மாகாண தொடர்பாடல் செயலமர்வு | 350,993.00 |
| | | | 1-1-07-3 | மொழி பயிற்சி | 282,615.00 |
| | | | 1-1-07-5 | வெளியீடுகள் | 3,000.00 |
| | | | | | 14,500 |
| | | | 1-1-07-7 | அலுவலர்களுக்கான பயிற்சி கட்டணம் | 1,111,541.78 |
| | | | 1-1-09-1(1) | தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சி | 313,502.50 |
| | | | 1-1-09-1(2) | தளபாடங்களும் இணைப்புக்களும் | 382,540.31 |
| | | | 1-1-09-1(3) | அலுவலக நலனோம்பு உபகரணங்கள் | 1,200.00 |
| | | | 1-1-09-2 | நூலக நூல்கள் | 44,180.00 |
| | | | 14 | வாகனங்கள் | 2,093,000.00 |
| | | | 14.1 | கொள்வனவு முற்பணம் | 61,357.67 |
| | | | 15.1 | வரி | 55,000.00 |
| | | | 16.01 | உற்சவ முற்பணம் | 7,000.00 |
| | | | 17 | விசாரணை செலவு | 10,000.00 |
| | | | 18 | சிறுரொக்கம் | 401,193.29 |
| | | | 20 | ஊ.சே.நி. - 10% | 2,000.00 |
| | | | 22 | மாற்றப்படாத காசோலை கணக்கு | 945,889.98 |
| | | | 24 | தொங்கற் கணக்கு | 1,165,162.32 |
| | | | 30 | முற்கொடுப்பனவு | 757,500.00 |
| | | | 35.01 | உள்ளபடி செலவுகள் | 116,692.82 |
| | | | 38 | பேரவை நிதி | 49,462.00 |
| | | | 43 | உபகாரத் தொகை | 300,000.00 |
| | | | 44 | நானாவித வைப்புக்கள் | 515,000.00 |
| | | | 47 | மாணவர் பதிவுக் கட்டணம் | 32,000.00 |
| | | | 31.12.2102 | மீதி முன் கொண்டுவரப்பட்டது | 174,606.04 |
| | | 21,227,495.39 | | | 21,227,495.39 |
| 01.01.2013 | | 174,606.04 | | | |

பத்திரிகை ஆணையாளர்
இலங்கைப் பத்திரிகைப் பேரவை
28 பெப்ரவரி 2013

கணக்காளர்
இலங்கைப் பத்திரிகைப் பேரவை
28 பெப்ரவரி 2013

தலைவர்
இலங்கைப் பத்திரிகைப் பேரவை
28 பெப்ரவரி 2013

## இலங்கைப் பத்திரிகைப் பேரவை
## 31.12.2012 ஆம் வருட காசு பாய்ச்சுக் கூற்று

| | 2012 | 2011 |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கையிலான காசு பாய்ச்சுக் கூற்று | ரூபா | ரூபா |
| வரிசெலவுகளுக்கு முன்னர் இலாபம்/நட்டம் சீராக்கல் | (79,647.99) | 877,362.64 |
| பெறுமானத் தேய்வு | 1,110,320.50 | 541,361.33 |
| எழுதி நீக்கல் | - | 200.00 |
| முன்னைய ஆண்டு சீராக்கல் | 1,030,672.51 | (335,801.31) |
| தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னர் | 8,754.33 | 12,104.27 |
| | 1,039,426.84 | (323,697.04) |
| இருப்பு (புத்தகங்கள்) (அதிகரிப்பு/குறைப்பு) | 68,002.99 | (74,614.41) |
| இருப்பு (காகிதாதிகள்) (அதிகரிப்பு/குறைப்பு) | (66,121.84) | (11,116.74) |
| உள்ளூர் முற்கொடுப்பனவு (அதிகரிப்பு/குறைப்பு) | - | 57,000.00 |
| பெற்ற வருமானம் (அதிகரிப்பு/குறைப்பு) | 112,379.00 | 209,409.83 |
| உற்சவ முற்பணம் (அதிகரிப்பு/குறைப்பு) | 1,000.00 | 3,000.00 |
| இடருதவிக் கடன்கள் (அதிகரிப்பு/குறைப்பு) | 186,239.00 | 193,527.75 |
| முற்கொடுப்பனவு (அதிகரிப்பு/குறைப்பு) | (134,330.79) | (910,899.76) |
| சில்லறை வருமதியாளர் (அதிகரிப்பு/குறைப்பு) | - | 250.00 |
| உள்ளப்படி செலவுகள் (அதிகரிப்பு/குறைப்பு) | (7,340.60) | (257,162.66) |
| | 159,827.76 | (790,605.99) |
| செயற்பட்டு நடவடிக்கையிலான தேறிய காசு பாய்ச்சல் | | |
| முதலீட்டு நடவடிக்கையிலான தேறிய காசு பாய்ச்சல் | | |
| மூலதன பங்களிப்பு | 682,000.00 | 700,000.00 |
| வாகன மீள் மதிப்பீடு ஒதுக்கம் | - | 9,750,000.00 |
| நிலையான சொத்து கொள்வனவு | (673,145.31) | (10,453,156.50) |
| நிலையான சொத்து விற்பனை | 800,000.00 | - |
| திறைசேரிக்கு மீளளிப்பு | (757,500.00) | - |
| நிலையான சொத்து முதலீடு | - | 2,094,650.20 |
| ஆய்வுநிதி முதலீடு | (417,393.11) | (61,516.94) |
| கடனுக்கான முதலீடு | (311,905.61) | (133,316.42) |
| உபகாரத் தொகைக்கான ஒதுக்கீடு | 309,578.58 | (905,025.37) |
| நானாவித வைப்புக்கள் | (448,234.32) | 278,234.32 |
| உபகாரத் தொகைக்கான வைப்பீடு | (267,170.13) | (135,851.37) |
| | (1,083,769.90) | 1,134,017.92 |
| | 115,484.70 | 19,714.89 |
| | 59,121.34 | 39,406.45 |
| | **174,606.04** | **59,121.34** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதிதிணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: TM/F/SLPC/2012
ඔබේ අංකය / உமது இல / Your No.:
දිනය / திகதி / Date: 19 June 2013

தலைவர்,
இலங்கை பத்திரிகைப் பேரவை,

**இலங்கை பத்திரிகைப் பேரவையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

இலங்கை பத்திரிகைப் பேரவையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றக் கூற்று, காசுபாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்கள் என்பவற்றினது பொழிப்பொன்றைக் கொண்ட 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1973 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை மன்ற அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை மன்றத்தின் தலைவருக்கு 2013 ஏப்பிறல் 04 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.

1.2 ***நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு***

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 ***கணக்காய்வாளரின் பொறுப்பு***

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்கள் உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும், முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் அண்டின் 38ம்

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

நிதி அதிகாரச் சட்டத்தின் 13ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கான அதிகாரத்தைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 ***முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை***

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. ***நிதிக்கூற்றுக்கள்***

2.1 ***முனைப்பழியுள்ள அபிப்பிராயம்***

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பத்திரிகை பேரவையின் 2012, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 ***நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்***

2.2.1 ***கணக்கீட்டுக் கொள்கைகள்***

பேரவையின் ஆரம்பந்தொட்டு மோட்டார் வாகனங்களது தேய்மானம் 20 சதவீதமாக இருந்தபோதும், மீளாய்வாண்டில் அது 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. அதனை மாற்றஞ் செய்வதற்கான காரணம் மற்றும் அம்மாற்றத்தின் மூலம் நிதிசார் நிலைமை மற்றும் நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட தாக்கம் என்பன நிதிசார் கூற்றுக்களில் வெளிக்கொணரப்படவில்லை.

**2.2.2** ***கணக்கீட்டுக் குறைபாடுகள்***

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிக்கொடைக்கான ரூபா 267,170 நிதியேற்பாட்டை காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டிற்கான நட்டத்தில் சீராக்கல் செய்வதற்குப் பதிலாக முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசு வெளிப்பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது கைதவிர்ப்புச் செய்யப்பட்ட வாகனத்திற்குரிய இலாபமாகிய ரூபா 257,500 காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டிற்கான நட்டத்தில் சீராக்கல் செய்யப்பட்டு அதனோடு தொடர்புடைய விற்பனைத் தொகையாகிய ரூபா 757,500 முதலீட்டு நடவடிக்கைகளினாலான காசு உட்பாய்ச்சலாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக கைதவிர்ப்புச் செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் மொத்தக் கிரயமாகிய ரூபா 800,000 காசு உட்பாய்ச்சலாகக் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே, ஆண்டின் போதான நிலையான சொத்துத் தேய்மான நிதியேற்பாடாகிய ரூபா 1,410,321 தொகையிலிருந்து கைதவிர்ப்புக்குள்ளான மோட்டார் வாகனத்தின் திரண்ட தேய்மானமாகிய ரூபா 300,000 ஈடுசெய்யப்பட்டதன் பின்னர் தவறுதலாக ரூபா 1,110,321 காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டிற்கான நட்டத்தில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

**2.2.3** ***பெறவேண்டிய கணக்குகள்***

2009 ஆம் ஆண்டு தொடக்கம் இரு நிறுவனங்களிலிருந்து பெறவேண்டியிருந்த ரூபா 77,900 மீளாய்வாண்டு முடிவிலும் அறவிடப்படாதிருந்தது.

2.2.4 ***சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை***

2011, திசெம்பர் 29 ஆந் திகதி தொடக்கம் பேரவை அலுவலகம் நடைபெறும் தனியார் துறைக்குரிய கட்டிடம் ஒன்று வருடாந்தம் ரூபா 1,920,000 வாடகைப்படி பெறப்பட்டமை தொடர்பாக சனாதிபதி செயலகத்தின் 2010, மே 14 ஆந் திகதிய 1/17/1 ஆம் இலக்கக் கடிதத்தின் 1 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு அரசாங்க விலைமதிப்பீட்டின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட வேண்டியபோதும் அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

2012, ஜுலை 10 ஆந் திகதிய பொது முயற்சிகள் மீதான குழுக் கூட்டத்தில் இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு, கூடிய விரைவில் அரசாங்கக் கட்டிடமொன்றிற்கு இதனை மாற்றஞ் செய்ய வேண்டும் எனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததும் மீளாய்வாண்டு முடிவிலும் அது அமுலாக்கப்படாதிருந்தது.

3. **நிதிசார் மீளாய்வு**

3.1 ***நிதிசார் விளைவுகள்***

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பேரவையின் நடவடிக்கைகளால் விளைந்த நிதிசார் விளைவு மீண்டுவருஞ் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கருத்திற் கொள்வதற்கு முன்னர் ரூபா 16,680,648 பற்றாக்குறை ஆகும். மீண்டுவருஞ் செலவினத்திற்காக அரசாங்கத்திடமிருந்து ரூபா 16,601,000 பெறப்பட்டதன் பின்னர் பற்றாக்குறை ரூபா 79,648 ஆகியது. இதற்கொப்பாக, முன்னைய ஆண்டின்

நிதிசார் விளைவு மீண்டுவருஞ் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கருத்திற் கொள்வதற்கு முன்னர் ரூபா 14,877,363 ஆகியது. மீண்டுவருஞ் செலவினத்திற்காக அரசாங்கத்திடமிருந்து பெற்ற ரூபா 14,000,000 மானியத்தின் பின்னர் அது ரூபா 877,363 பற்றாக்குறை ஆகியது. ஆண்டின்போது செலவினம் ரூபா 2,021,734 ஆல் அதிகரித்த போதும், அரசாங்க மானிய அதிகரிப்பு ரூபா 2,601,000 ஆகியமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 797,715 அதிகரிப்பேற்படக் காரணமாயிற்று.

### 3.2 *பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு*

1973 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை அதிகாரச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இப்பேரவையின் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களில் பத்திரிகைகளைப் பதிவுசெய்தலும் புகார்களை விசாரிப்பதும் மாத்திரமே அநேக ஆண்டுகளாக நடைபெற்ற விடயங்களாகும். எவ்வாறாயினும், இப்பேரவையை நடாத்துவதற்காக ஊழியர் சம்பளத்திற்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் ரூபா 9,933,084 செலவழிக்கப்பட்டது. எனினும், பத்திரிகைகளைப் பதிவு செய்வதாலும் தாமதக் கட்டண அறவீடு மூலமாகவும் பெறப்பட்ட வருமானம் ரூபா 188,550 க்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது ஒட்டுமொத்த மீண்டுவருஞ் செலவினத்தின் அதிகரிப்பு 13 சதவீதமாகும்.

## 4. *செயற்பாட்டு மீளாய்வு*

### 4.1 *செயல்திறன்*

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன :-

(அ) 2012 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தில் உள்ளடங்கிய ஆங்கிலச் சான்றிதழ் கற்கை நெறி நடாத்தப்படுதல் மற்றும் சஞ்சிகைப் பிரசுரம் எனும் இரு நடவடிக்கைகளும் முற்றாக நடைபெறவில்லை. பத்திரிகையாளர்களது சங்கத்தைப் பதிவு செய்யும் நடவடிக்கையின் கீழ் 2 சங்கங்கள் மாத்திரமே பதியப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின்போது புதினப் பத்திரிகைகளுக்கு எதிராக 42 புகார்கள் கிடைக்கப்பெற்றன. 2011 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்படாத 10 புகார்களுடன் தீர்த்துவைக்க வேண்டியுள்ள புகார்களது எண்ணிக்கை 52 ஆகியது. அதில் 21 புகார்கள் மீளாய்வாண்டு முடிவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

### 4.2 *போதியளவு நிறைவேறாத நோக்கங்கள்*

பேரவையை நிறுவுவதற்கான அதிகாரச்சட்டத்தின் 8(3) ஆம் பிரிவின் பிரகாரம், புதினப் பத்திரிகை மற்றும் பத்திரிகையாளர்கள் உயர் பத்திரிகைப் பண்புகளைக் கொண்டிருப்பதைக் கவனித்துக்கொள்வது பேரவையின் பிரதான நோக்காக இருந்தது. அந்நோக்கத்தைக் அடைந்து கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட பத்திரிகையாளர் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளை உள்ளடக்கிய முறைமைகள் 1981 ஆம் ஆண்டின் பின்னர், அதாவது, 32 ஆண்டுகளின்போது தற்போதைய பிரசுர ஊடகத்துறையின் துரித அபிவிருத்தியுடன் இசையுமாறு திருத்தங்களுக்கு உள்ளாகவில்லை. அவ்வாறே, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் விசாரிக்கப்படுதல் மற்றும் புதினப்பத்திரிகைகள் பதிவுசெய்யப்படுதல் தவிர, இப்பண்புகளைக் குறிக்கும் முறைமைகள் தொடர்பாக மேற்பார்வை செய்யும் முகமாக நாளாந்தம் பிரசுரிக்கப்படும் புதினப்பத்திரிகை விசாரிக்கும் நடைமுறைகளை பேரவை கொண்டிருக்கவில்லை.

### 4.3 *முகாமைத்துவ வினைத்திறமையின்மை*

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) பேரவையைத் தோற்றுவிப்பதற்கான அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம், புதினப் பத்திரிகைகளில் வெளியாகும் பொய்யான, அபகீர்த்தி விளைவிக்கத்தக்க, நல்லொழுக்கமற்ற செய்திகளைக் கண்டறிந்து தவறிழைப்பவர் களை சட்டத்தின் முன்கொண்டுவருதல் தொடர்பாக பேரவையில் போதிய பொறிமுறைகள் இருக்கவில்லை.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம், பேரவையினால் விடுக்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் குறித்த புதினப் பத்திரிகைகளது உரிமையாளர்கள் தமது விருப்பத்தின் பேரில் பதிவுக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தால் மாத்திரமே புதினப் பத்திரிகைகளைப் பதிவுசெய்தல் மற்றும் அதற்கெனக் கட்டணம் அறவிடல் என்பவற்றிற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கமைய, மீளாய்வாண்டின்போது பதிவுசெய்யப்பட்ட புதினப் பத்திரிகைகளது எண்ணிக்கை 196 க்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஊடக டிப்ளோமா கற்கை நெறிகள் மூன்றையும் ஒரு ஆங்கில சான்றிதழ் கற்கை நெறியையும் மன்றம் நடாத்தியவாறிருந்தது. அதனோடிணைந்த பின்வரும் நலிவுகள் காணப்பட்டன.

(i) 2011 ஆம் ஆண்டின்போது நடாத்தப்பட்ட ஆங்கிலச் சான்றிதழ் கற்கைநெறிகளில் பங்குபற்றியவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் கற்கை நெறிக் கட்டணம் ரூபா 525,000 ஆகும். இதில் ரூபா 82,500 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இதற்கெனச் செலவிடப்பட்ட தொகை ரூபா 222,188 ஆகும். பங்குபற்றியவர்களில் 95 சதவீதமானோர் தொழில்சார் ஊடகவியலாளர்கள் ஆவர். இத்தொகையை அறவிடுவதற்கான நடைமுறைகள் கற்கைநெறி ஆரம்பிக்கும்போதே ஏற்படுத்தப்படாதிருந்தன;

(ii) 2011/2012 கல்வி ஆண்டிற்காக 2011 ஜுலை மாதத்தில் ஆரம்பமாகிய ஊடக டிப்ளோமாக் கற்கைநெறிக் கட்டணமாக ரூபா 600,000 அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 268,000 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது;

(iii) ஒவ்வொரு கற்கை நெறிக்கும் பதிவுசெய்யப்பட்ட மாணாக்கரது எண்ணிக்கை, பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை, இறுதிப்பரீட்சைகளுக்குத் தோற்றியவர்களது எண்ணிக்கை என்பவற்றினது பகுப்பாய்விற்கமைய, கற்கைநெறிகளுக்குப் பதிவுசெய்யப்படும் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட 75 சதவீதமானோர் மாத்திரமே அதில் பங்குபற்றுவதும் அதிலும் 60 சதவீதமானோரே இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதும் ஆகும். 40 சதவீதமானோர் கற்கைநெறிகளிலிருந்து விலகியிருந்தார்கள்;

(ஈ) பேரவையினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கும் புதினப் பத்திரிகை வாசிப்பு தொடர்பாக சந்தாதாரர்களை மீளாய்வு செய்வதற்காகக் கிடைத்த பிரேரணைகளை மதிப்பீடு செய்ததன் பின்னர் அவர்களின் சிபார்சுகளை மீளப் பெற்றுக்கொள்வது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

அவ்வாறே, இது தொடர்பாக 2012, யூலை 10 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளைப்படி நடப்பதற்கு பேரவை தவறியிருந்தது.

(உ) மீளாய்வாண்டின்போது பேரவை 8 செயலமர்வுகளை நடாத்தியிருந்தது. அவையாவன, 4 மாவட்டப் பிரதேச ஊடகவியலாளர் செயலமர்வுகள், 3 பாடசாலை ஊடகச் செயலமர்வுகள், 1 தொழில்சார் ஊடகவியலளார் செயலமர்வு என்பனவாகும். இதற்கெனச் செலவிடப்பட்ட தொகை ரூபா 1,686,068 ஆகும். நடைபெற்ற இச்செயலமர்வுகள் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்படி ஊடகவியலாளர் செயலமர்வுகளில் பெரும்பாலானவை தனியார் துறைக்குச் சொந்தமான இடங்களிலேயே நடாத்தப்பட்டிருந்தன. அவற்றில் பங்குபற்றிய ஊடகவியலாளர், பதவியணியினர், விரிவுரையாளர்கள் ஆகியோருக்கு தங்குமிடவசதி, உணவளித்தல் என்பவற்றிற்கென செயலமர்விற்காகச் செலவிடப்பட்ட மொத்த செலவினத்தில் 64% அதாவது ரூபா 971,964 செலவழிக்கப்பட்டிருந்தது;

(ii) மேலும், மாவட்டங்களில் செயலமர்வுகளை நடாத்துகையில் மாவட்டங்களைத் தெரிவுசெய்த முறை தொடர்பாக விளக்கமளிக்கப்படவில்லை. 2010, 2011 ஆம் ஆண்டுகளில் பதுளை மாவட்டத்தில் 2 செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன. 2010 முதல் 2012 வரையான 3 ஆண்டுகாலத்தில் 11 மாவட்டங்களை மாத்திரமே உள்ளடக்கியவாறே செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன.

4.4 ***சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்***

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) மீளாய்வாண்டின்போது ரூபா 757,500 பெறுமதிக்கு கைதவிர்ப்புச் செய்யப்பட்ட பேரவையின் கார் ஒன்றின் விற்பனை நடைமுறையில் அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு முன்னரே விலைமதிப்பீட்டுச் சபையை நியமித்தமை, தெரிவுசெய்யப்பட்ட கேள்வியை வழங்கியவரது கேள்வியை மாத்திரமே முத்திரை பொறித்து வைத்தமை, கேள்விகள் திறக்கப்படும் போது கொள்வனவுக் குழுவின் சகல அங்கத்தவர்களும் அதில் கைச்சாத்திடாமை, தெரிவுசெய்யப்பட்ட கேள்வியை வழங்கியவர் கேள்வி திறக்கப்படும் தினத்தன்றே வாகனத்தைப் பரிசீலித்துத் தனது கேள்வியைச் சமர்ப்பித்தமை அத்தினத்தன்றே வாகனத்தை அவரிடம் ஒப்படைத்தமை என்பன சர்ச்சைக்குரிய விடயங்களாகும்.

(ஆ) தேசத்துக்கு மகுடம் காட்சிக் கூடத்தைத் தயாரிப்பதற்கு கூறுவிலைகளைக் கோருகையில் பிரசித்த கூறுவிலைகள் கோரப்படவில்லை. கேட்பு மனுக்களைக் கோருவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட 4 நிறுவனங்களில் மூன்றின் மூலம் மன்றத்தின் ஏனைய வேலைகளை மாறி, மாறி செய்வித்தமையும் அதற்கிடையே தெரிவுசெய்யப்பட்ட வழங்குனரின் கூறுவிலைகளைச் சமர்ப்பித்த திகதி மற்றும் ஏனைய சகல நிறுவனங்களும் கூறுவிலைகளைச் சமர்ப்பித்த என்பவற்றுக்கிடையே விசேட காலதாமதம் நிலவியமை காரணமாக கூறுவிலைகளைக் கோரும் நடவடிக்கை வெளிப்படையாக அமையாமை என்பனவும் புலனாகியது.

4.5 ***பதவியணியினர் நிர்வாகம்***

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) பேரவையினைத் தோற்றுவிப்பதற்கான அதிகாரச்சட்டத்தினது 22 ஆம் பிரிவின் பிரகாரம், அதன் பிரதான நிறைவேற்றுதர உத்தியோகத்தரான புதினப்பத்திரிகை ஆணையாளர் பதவி 2010, மாச்சு 31 முதல் அவ்வப்போது அமைச்சின் சிபார்சுகேற்ப நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களால் பதில் கடமையாற்றும் அடிப்படையில் அமைந்திருந்தது. அவ்வாறே, 2006, செத்தெம்பர் 02 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் படி பேரவையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, ஆரம்பந்தொட்டே பேரவையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 6 பிரதான பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவின.

(ஆ) உதவி ஆணையாளர் (மீளாய்வு) பதவிக்கு 2009, செத்தெம்பர் 01 முதல் 2012, ஓகத்து 31 வரையான 3 ஆண்டுகாலத்தில் பிறிதொரு நிறுவனத்திலிருந்து தற்காலிகமாகக் கடமையாற்றும் அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், அதன்பொருட்டு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

5. ***கணக்களிப்பு பொறுப்பும் சிறந்த ஆளுமையும்***

5.1 ***நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்***

நிதிசார் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புகளில் பேரவை நிறுவப்பட்ட ஆணைப்பிரசுரமும் பிரதான பணிகளும் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை.

5.2 ***செயல்திட்டம்***

2012 ஆம் ஆண்டிற்காக செயல்திட்டத்தை பேரவை தயாரித்திருந்தபோதும், அது 2003, ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் அத்தியாயத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கேற்ற வாறு தயாரிக்கப்படவில்லை. அதன் காரணமாக, செயல்திட்டமானது பேரவையின் செயலாற்றலினைத் திட்டமிடுவதற்கான ஆக்கபூர்வமான சாதனமாகப் பயன்படுத்தப்பட முடியாதிருந்தது. மேலும், அச்சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் உள்ளபடியான செயற்திறன் திட்டமிட்டவாறு நடைபெறுதல் மற்றும் தேவையான பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு பேரவையால் யாக்கத்திட்டம், பாதீடு மற்றும் செயற்திறன் என்பன அவ்வப்போது பரிசீலிக்கப்படுதல் என்பனவும் நடைபெறவில்லை.

5.3 ***உள்ளகக் கணக்காய்வு***

மீளாய்வாண்டின்போது பேரவையின் நடவடிக்கைகளும் கொடுக்கல் வாங்கல்களும் உள்ளகக் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை வழங்கப்பட வேண்டிய தேவை கருத்திற்கொள்ளப்படவில்லை.

5.4 ***கொள்வனவுத் திட்டம்***

2006, ஜனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேபொகொக சுற்றறிக்கையின் 4.2.1 ஆம் பந்திக்கமைய பேரவையின் கொள்வனவு நடவடிக்கைகளின்போது சிக்கனம், வினைத்திறன், ஆக்கபூர்வத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்தும் கொள்வனவு நடைமுறையாக பிரதான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. அன்றாடம் தேவைப்படும் வழங்கல்களும் சேவைகளும் முன்கூட்டியே திட்டம் எதுவுமின்றிப் பெறப்படுவது அவதானிக்கப்பட்டது.

5.5 ***பாதீட்டுக் கட்டுப்பாடு***

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான, செலவினங்களுக்கிடையே 11 முதல் 100 சதவீதம் வீச்சுடைய முரண்கள் நிலவியமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) எழுதுகருவி இருப்புக் கட்டுப்பாடு
(ஆ) கற்கைநெறிச் செயலமர்வுகளை நடாத்தல்
(இ) கணக்கீடு
(ஈ) பதவியணியினரது நடவடிக்கைகள்

எச்.ஏ.எஸ். சமரவீர,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.